சொல்கிறீர்களே, என்ன? (குறுக்கீடுகள்)—தங்களுக்குப் பரிந்துரை செய்து, "திரு. விசுவநாதன் அவர்கள் கையை உயர்த்திக் கொண்டிருக்கின்றார்; கேள்விக்கு அனுமதி கொடுங்கள்" என்று கேட்டுக்கொண்டேன். ஆனால், அது வினாவோடு நில்லாமல், விவாதம் அளவிற்கு வந்து, இப்போது பரீட்சை mark வரையிலே வந்திருப்பது நல்லதல்ல. ஆகவே, கேள்வி நேரத்தைக் கேள்வி நேரமாகவே நடத்த தாங்களும் வழிகாட்டவேண்டும்; அனைவரும் ஒத்துழைக்கவேண்டும், அமைச்சர்கள் உள்பட. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 5, (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன், மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

5—

வருவாய் வட்டம்

***195—திரு. வ. முல்லைவேந்தன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருட்டிணகிரி மாவட்டம், இராயக்கோட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருட்டிணகிரி மாவட்டத்திலே இராயக்கோட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு, வட்டம் பிரிப்பது தற்சமயம் இயலாது.

திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராயக்கோட்டை கிராமத்திலிருந்து வட்டத் தலைநகரங்களான தேன்கனிக்கோட்டைக்குச் செல்லவேண்டுமானால் 35 கிலோ மீட்டரும், கிருட்டிணகிரிக்கு 32 கிலோ மீட்டரும், பாலக்கோட்டிற்கு 30 கிலோ மீட்டரும் செல்லவேண்டிய கட்டாயச் சூழ்நிலை இருக்கிற கிராமப்புறப் பகுதி அது. ஏழையெளிய மக்கள், கிராமப்புற மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட நிலையிலே இருக்கிற பெரும்பாலான மக்கள், வருவாய்க் கோட்ட அலுவலகங்களுக்குச் செல்வதற்கு மிகவும் இடர்ப்பாடாக இருக்கிற சூழ்நிலையில், ஏராளமான மக்கள் தொகையைக் கொண்டிருக்கிற தகுதி வாய்ந்த இந்த இடத்தை,

2006 ஆகஸ்ட் 4]

நீண்டகாலமாக அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கையாக இருக்கிற காரணத்தால், வட்ட வருவாய்க் கோட்டமாக அமைத்துத்தர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை மீண்டும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் நாடாளுமன்ற, சட்டமன்ற எல்லை வரையறை ஆணையத்தின் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிற காரணத்தால், அந்த ஆணையத்தினுடைய கடிதத்திலே, தற்சமயம் நகராட்சி, ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியம் ஆகிய இந்தப் பகுதிகளிலே வட்டங்கள் பிரிப்பதைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கவேண்டுமென்ற கோரிக்கை, எல்லை வரையறை ஆணையத்திடமிருந்து வந்திருக்கிறது. அந்த அடிப்படையிலேதான், தற்சமயம் வழங்க இயலாது என்று அறிவித்தேன்.

(முற்பகல் 10—00

திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்டகாலமாக எல்லைகள் பிரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வருகிறபோது, மக்கள் தொகை கணக்கெடுப்பு என்ற காரணத்தால், எல்லைகள் பிரிக்க முடியாது என்ற நிலையும், இப்போது சட்டமன்ற, நாடாளுமன்ற எல்லை மறுசீரமைப்பு என்ற காரணத்தால், பிரிக்க முடியாது என்ற நிலையும் இருக்கிற இந்தச் சூழ்நிலையில், ஒரு சிறப்பு விதிவிலக்கு அடிப்படையில் மக்களுடைய தேவைகளைக் கருதி, பெருமளவுக்கு இருந்த தருமபுரியை, கிருட்டிணகிரி—தருமபுரி மாவட்டம் என இரண்டாகப் பிரித்து—கிருட்டிணகிரி மாவட்டமாக ஆகியிருக்கிற இந்த நிலையில், அப்போதே வட்டத் தலைநகரத்தைப் பிரித்து இருக்கலாம். இல்லாவிட்டாலும்கூட, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு சிறப்பு விதிவிலக்கு தந்து, இராயக்கோட்டைப் பகுதி மக்களுடைய நீண்டகாலக் கனவை நனவாக்குகிறவகையில், பிரித்துத்தர அரசு மறுபரிசீலனை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்ட பதிலிலே, எல்லை வரையறை ஆணையம் குறிப்பிட்டிருப்பதைத் தெளிவாக இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறேன். பல்வேறு உறுப்பினர்கள் இந்த மாமன்றத்திலே இதே கருத்தை என்னிடத்திலே நேரிலும், வினாக்களுமாகத் தந்திருக்கின்றார்கள். மிகச் சிறப்பு நேர்வாகக்

கருதுகின்ற நேரத்திலே, இந்த அரசு எல்லை வரையறை ஆணையத்தைத் தொடர்பு கொண்டு அப்படி அத்தியாவசியம் ஏற்பட்டால், நிச்சயமாக அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. மகேந்திரன்.

திரு. கே. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தில் 42 இலட்சம் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையில், ஐந்து வருவாய் வட்டங்கள் மட்டுமே செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஐந்து வருவாய் வட்டங்கள் செயல்படக்கூடிய காரணத்தினால், மக்களுக்குக் கிடைக்க வேண்டிய பல்வேறு சான்றிதழ்களைப் பெறுவதில் சிரமம் என்பது ஏற்படக்கூடிய காரணத்தினால், சென்னை மாநகரத்தில் கூடுதல் வருவாய் வட்டங்கள் உருவாக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகத் தெளிவாக எல்லை வரையறை ஆணையத்தைக் குறிப்பிட்டு நான் ஏற்கெனவே இந்த அவையிலே பதில் அளித்திருக்கின்றேன். அந்தவகையிலே சிறப்பு நேர்வாக மிக அத்தியாவசியம் நீங்கள் பிரித்தே ஆக வேண்டும்; அதிலே இடர்ப்பாடுகள் இருக்கின்றன என்பதை நீங்கள் அரசிற்குத் தெரிவித்தால், எல்லை வரையறை ஆணையத்தோடு தொடர்புகொண்டு அந்த வட்டங்களைப் பிரிப்பதற்கு இந்த அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. செந்தில் பாலாஜி.

திரு. வே. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் சட்டமன்றத் தொகுதி, தாந்தோணி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கோயம்பள்ளி ஊராட்சி, அமராவதி ஆற்றின் வட பகுதியில் உள்ளது. கரூர் ஊராட்சி ஒன்றியத்துடன் இந்தப் பகுதி இணைந்துள்ளதால் பொது மக்கள் தாந்தோணி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குச் சென்றுவர சிரமமாக உள்ளது. இதை அப்பகுதி மக்கள், கரூர் ஊராட்சி ஒன்றியத்துடன் சேர்த்துக்கொள்ள ஆவன செய்யுமாறு கேட்டுள்ளார்கள். உரிய விளக்கம் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: தற்சமயம் இயலாது. எதிர்காலத்தில் அரசு பரிசீலிக்கும்.

2006 ஆகஸ்ட் 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.வி. சேகர்.

திரு. எஸ்.வி. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அரசுப் போக்குவரத்துக் கழகம் குறித்து கேள்வி கேட்க கை தூக்கியிருந்தேன். இப்போது அதைக் கேட்கலாமா என்பதை நீங்கள் தயவுசெய்து சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். இந்த வினாவிற்குத்தான் துணை வினா கேட்க முடியும்.

திரு. எஸ்.வி. சேகர்: இல்லை, இல்லை. நான் அப்போதே கையைத் தூக்கிவிட்டேன். இப்போதுதான் சந்தர்ப்பம் கொடுத்திருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடுகள்)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில், உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை, உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப அனுமதி கோருதல்

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், சொல்லுங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: நேற்று இந்த அவையில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் குறித்து விவாதிப்பதற்குப் பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதி அளிப்பார்களா? நேற்றையதினம் நடைபெற்ற நிகழ்ச்சிகள் அனைத்தும், விதிமுறைகளுக்கு மாறாக இருக்கின்ற காரணத்தால், விதிகள் மீறப்பட்டிருக்கின்றன என்ற ஒழுங்குப் பிரச்சினையை, விதி 116—ன்கீழ் பேரவைத் தலைவருடைய கவனத்திற்கு நான் கொண்டு வந்திருக்கிறேன். பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதி அளிக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.